بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *12/08/2022* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# பிரிட்டன் ஆண்டு மாநாடு தொடர்பாக, அஹ்மதிய்யா ஜமாஅத் மீது இறங்கிய அல்லாஹ்வின் அருள்கள் குறித்து ஈமானுக்கு ஒளியூட்டும் குறிப்புகள்

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾

صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

அல்ஹம்துலில்லாஹ்! பிரிட்டன் ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கினான். நாம் அந்த மூன்று நாட்களில் அல்லாஹ்வின் அருள்கள் பொழிவதைக் கண்டோம். மாநாட்டிற்குப் பெரும் காத்திருப்பு இருக்கின்றது. முழு வருடமும் (அதற்காக) காத்திருப்பு இருக்கின்றது. நிர்வாகத்திற்கும் பெரும் ஆயத்தங்களை செய்ய வேண்டியதுள்ளது. ஆனால், மாநாடு ஆரம்பிக்கும்போது கண் சிமிட்டுவதற்குள் இந்த மூன்று நாட்கள் எவ்வாறு கடந்து போயின என்பது தெரியாமல் போய் விடுகின்றன.

இவ்வருடமும் பல்வேறு கோணங்களில் மக்களுக்கும், எனக்கும் சில பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக எண்ணம் இருந்தது. சிலர் கடிதங்கள் எழுதி கவலையை வெளிப்படுத்தி இருந்தனர். மக்களும், நானும், ஜமாஅத்தினரும் துஆக்களை செய்து கொண்டிருந்தோம். எவ்வாறு இருப்பினும், அனைத்துப் பாதுகாப்பு தொடர்பான எண்ணங்களையும், அச்சங்களையும் அல்லாஹ் அமைதியாக மாற்றி விட்டான். கோவிட் -ம் ஒரு காரணமாக இருந்தது. அதனுடைய தாக்கம் கலந்து கொண்டவர்களுள் சிலர் மீது ஏற்பட்டிருக்கலாம். ஆனால், பொதுவாகப் பார்க்கும் போது, அல்லாஹ்வின் பெரும் அருள் இருந்தது.

*இந்த குத்பா மாநாட்டிற்கு பிறகுள்ள குத்பாவாக இருகின்ற காரணத்தினால், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஊழியர்களுக்கு நன்றி கூறி, கலந்து கொண்ட விருந்தினர்களின் தாக்கங்கள் பற்றியும், அல்லாஹ்வுடைய அருள்கள் பற்றியும் எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:* நான் முதலில் அனைத்து ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் மாநாட்டின் ஆயத்தங்கள் முதல் இறுதி கட்டம் வரை தன்னலமற்று பணியாற்றினார்கள். இப்பொழுது வரை தொடர்ந்து கொண்டிருக்கும் இறுதி கட்ட பணிகள் தொடர்பான ஏதேனும் வேலைகளை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். பிறகு, மாநாட்டின் போது பல்வேறு துறைகளில் ஊழியர்களும், ஊழியைகளும் பொதுவாகத் தமது திறமைகளுக்கேற்ப நன்கு பணியாற்றி இருக்கிறார்கள். அதற்காக கலந்து கொண்ட அனைவரும் (அவர்களுக்கு) நன்றி கூறக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

*சில குறைகளும் பலவீனங்களும் முன்னால் வந்துள்ளன. அதைப் பற்றி எடுத்துரைத்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இவ்வளவு பெரிய ஏற்பாட்டில் இந்த பலவீனங்கள் ஏற்பட்டு விடுகின்றன. ஆனால்

நிர்வாகத்தினுடைய பணி என்னவென்றால், இந்த பலவீனங்களையும் குறைகளையும் நீக்க வேண்டும். உதாரணமாக, பெண்கள் பகுதியில் உணவு விநியோகிக்கக்கூடிய துறையில் சில முறையீடுகள் வந்துள்ளன. அல்லது வேறு சில விஷயங்கள் உள்ளன. இது சம்பந்தமாக மக்களுடைய கடிதங்கள் வந்துள்ளன. நான் அவற்றை உடனுக்குடன் நிர்வாகத்தினருக்கு அனுப்பி வைக்கின்றேன். அதற்கேற்ப ஆய்வு மேற்கொண்டு தமது ரெட் நோட்டில் இந்த குறைகளை எழுதி அடுத்த வருடம் சிறந்த ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு துறையும் முயற்சி செய்ய வேண்டும்.

**MTA** -வும் மிக நல்ல கவரேஜ் செய்துள்ளது. இம்முறை அவர்கள் ஸ்டூடியோவையும், அனைத்தையும் தாமாகவே ஆயத்தம் செய்துள்ளார்கள். இதன் விளைவாக பல்லாயிரம் பவுண்ட் மிச்சப்படுத்தவும் பட்டுள்ளது. இவ்வருடம் நடந்த இன்னொரு விஷயம் என்னவென்றால், பல முன்னேற்றமடைந்த நாடுகளையும் முன்னேற்றமடையாத நாடுகளையும் மாநாட்டின் நிகழ்ச்சிகளின் போது ஒன்று சேர்த்து இருக்கிறார்கள். இதன் மூலமாக இங்கு அமர்ந்திருந்த மக்களும் பிற நாடுகளில் வசிக்கக் கூடிய தம் சகோதரர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஓர் ஒற்றுமை இருந்தது; அக்காட்சியை நாம் **MTA** உடைய கேமராவின் கண் மூலமாகக் கண்டோம். இது அல்லாஹ்வின் சிறப்பான அருளாகும். **MTA** வின் ஊழியர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒற்றுமையை **MTA** மூலமாக முழு உலகிலும் காட்டி எதிரிகளின் வாயை அடைத்து விட்டனர்; இதற்காக அவர்கள் நன்றிக்கு உரித்தானவர்கள்.

*இதன் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சில அந்நியர்கள், நம்மவர்கள் மற்றும் எழுத்தாளர்கள் ஆகியோரின் பல்வேறு தாக்கங்களின் ஒளியில் அல்லாஹ்வின் அருள்களைப் பற்றி எடுத்துரைத்தவாறு, மாநாட்டின் மூலமாக உலகில் இஸ்லாத்தினுடைய தூதுச் செய்தியை அல்லாஹ் எவ்வாறு சென்றடைய வைத்தான் என்பதைப் பற்றி எடுத்துரைத்தார்கள்.*

*காலத்தின் கலீஃபாவுடனான மக்களின் அன்பு, நேசம் குறித்து எடுத்துரைத்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:*

**நைஜரைச் சேர்ந்த ஓர் அஹ்மதியல்லாத ஆலிம்,** அபூபக்ர் சீனி சாஹிப் என்பவர் நியாமே நகரில் ஒரு பள்ளிவாசலின் இமாமாகவும் இருக்கிறார். அவர் கூறுகிறார்: “மிகவும் அதிகமாக என்னிடம் தாக்கத்தை ஏற்படுத்திய விஷயம் என்னவென்றால், காலத்தின் கலீஃபாவுடனான மக்களின் அன்பு மற்றும் நேசம் ஆகியவற்றின் தொடர்பாகும். காலத்தின் கலீஃபாவுடைய ஒவ்வோர் அசைவுக்கும் மக்கள் எந்த அளவு முழுமையாகக் கட்டுப்பட்டுக் கொண்டிருந்தார்கள்! சொற்பொழிவுகளின் போது முழுமையான அமைதியும் நிம்மதியும் பரவி இருந்தது.”

பிறகு அவர் கூறுகிறார்: “இந்த நேசத்தை இறைவனே மக்களுடைய உள்ளத்தில் இட்டது போன்று தோன்றியது. ஏனெனில், அதில் எவ்வித செயற்கைத் தனத்திற்கான சந்தேகமும் இருக்கவில்லை.”

**புர்கினோ ஃபாசோவைச் சேர்ந்த ஓர் அஹ்மதியல்லாத நண்பர் இஸ்ஹாக் சாஹிப் என்பவர் கூறுகிறார்:** “உங்களுடைய ஆண்டு மாநாடு மிகவும் மகத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அதற்கான உதாரணம் காணக் கிடைக்காது. இத்தனை மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடுவது என்பது ஏதேனும் அற்புதத்தை விட குறைந்ததல்ல. ஓர் இமாமைப் பின்பற்றுவதைப் பொருத்தவரை, இந்த மாநாடு தனக்குத்தானே நிகர் தானே தான். எவர் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் சரி!

இன்று உண்மையான இஸ்லாம் அஹ்மதியத்தே ஆகும். மக்கள் இந்த உண்மையை அடையாளம் கண்டு, இதில் நுழையக்கூடிய நாள் வெகு தொலைவில் இல்லை.''

பிறகு, **ஃபிரஞ்சு கயானாவில் சிரியாவைச் சேர்ந்த அஹ்மதியல்லாத ஒருவர்** உள்ளார். அவர் முதல்முறையாக மாநாட்டைப் பார்த்தார். அரபு பேசக்கூடியவர்களுக்காக பள்ளிவாசலில் MTA அல்அரபியா மூலமாக நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கான ஏற்பாடும் இருந்தது. அவர் கூறுகிறார்: ''நான் முதல்முறையாக ஜமாஅத்தின் தூதுச் செய்தியைக் கேட்கிறேன். மேலும், முதல்முறையாக நான் உங்களுடைய கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்டேன். முஸ்லிம்களிடையே எவ்வாறான ஓர் அமைப்பு உள்ளது என்றால், இஸ்லாத்தினுடைய உண்மையான தூதுச் செய்தியை இவ்வாறு அது உலகில் எட்ட வைத்துக் கொண்டிருக்கிறது; ஒரு கலீஃபாவிடம் செய்து கொண்ட பைஅத்தின் அடிப்படையில் முழு உலகிலும் அது பணியாற்றுகிறது என்பதைக் கண்டு நான் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானேன். இன்ஷா அல்லாஹ்! நான் தற்போது நிச்சயமாக உங்களுடைய ஜமாஅத்தைப் பற்றி படிப்பேன்; மேற்கொண்டு ஆய்வு செய்வேன்.''

**லைபீரியாவைச் சேர்ந்த முஸ்லிமல்லாத விருந்தினர் ஒருவர் கூறுகிறார்:** ''அஹ்மதிய்யா கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்டு நான் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானேன்..... அஹ்மதிய்யா ஜமாஅத் மிகவும் கட்டமைப்புள்ள ஜமாஅத் ஆகும் என்று இதற்கு முன்பு கேள்விப்பட்டிருந்தேன். அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு தலைவரின் கையில் எவ்வாறு ஒன்றுபட்டுள்ளது என்பதையும், உலகில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் எவ்வாறு ஈடுபட்டுள்ளது என்பதையும் இன்று எனது கண்களாலும் நான் பார்த்து விட்டேன்.''

***ஸாம்பியாவைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ பாதிரியார்*** *ஆண்டு மாநாட்டின் இறுதி நாளில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நிறைவுரையைக் கேட்டு மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானார். அவர் தம் உணர்வுகளை வெளிப்படுத்தியவாறு கூறுகிறார்:* ''உங்களுடைய கலீஃபாவின் சொற்பொழிவு மிகவும் வியப்பில் ஆழ்த்தக் கூடியதாக இருந்தது...... நான் இஸ்லாம் பெண்களுடைய உரிமைகளை அபகரித்துள்ளது; பெண்களுக்கு எவ்வித சுதந்திரத்தையும் கொடுக்கவில்லை என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இன்று இந்த சொற்பொழிவைக் கேட்டு எனது கண்ணோட்டம் மாறிவிட்டது. இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய உரிமைகளை கிறிஸ்தவம் கூட வழங்கவில்லை என்பதைக் கூறுவதில் எனக்கு எவ்வித வெட்கமும் இல்லை.''

**ஐவரி கோஸ்ட்டைச் சேர்ந்த தப்லீகின் கீழ் இருக்கின்ற நண்பர் ஒருவர்** முதல்முறையாக TV மூலமாக நேரடியாக ஒரு மாநாட்டை பார்த்துள்ளார். மாநாட்டின் ஏற்பாடுகளைக் கண்டு மிகுந்த தாக்கத்திற்கு ஆளானார். அவர் கூறுகிறார்: ''இவ்வளவு பெரும் எண்ணிக்கை, ஒரு கட்டுப்பாட்டுடனும் ஒழுங்கு முறையுடனும் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வது என்பது, கிலாஃபத்தின் தர்பிய்யத் அவர்கள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதைக் குறிக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கையில் மக்கள் எவ்வாறு பைஅத் செய்தனர் என்பது தெரியாது! ஆனால் இன்று கலீஃபாவின் கையில் மக்கள் பைஅத் செய்வதைக் கண்ட பிறகு உள்ளத்தில் ஏற்பட்ட ஆழமான தாக்கத்தையும், உள்ளத்தின் நிலையையும் வார்த்தைகளில் விவரிக்க முடியாது.''

மாநாட்டின் மூன்று நாட்களிலிருந்து பயனடைந்த **கேமரூனைச் சேர்ந்த உள்ளூர் ஜமாஅத் பெண்மணி ஒருவர்** மாநாடு முடிவடைந்த பிறகு அங்கிருந்த மக்களைப் பார்த்து அறிவுரை செய்தவாறு கூறினார்: "நமது நற்பேறு என்னவென்றால், நம்மிடத்தில் MTA உள்ளது. இது ஒரு டிவி சேனல் கிடையாது. மாறாக (இது), மனிதன் தினந்தோறும் அறிவைக் கற்றுக் கொள்ளும் ஒரு பள்ளிக்கூடம் ஆகும்; ஒரு பல்கலைக்கழகம் ஆகும். நாமும் இந்த மூன்று நாள்களில் பெரும் ஞானத்தை கற்றுக் கொண்டோம்..... ஆகவே ஒவ்வொருவரும் இதிலிருந்து பயனடைய வேண்டும். அனைவருடைய இஸ்லாமிய அறிவும் அதிகரிப்பதற்காக, முறையாக வீடுகளில் இதைப் பார்க்க வேண்டும். குழந்தைகளுக்கும் காட்ட வேண்டும். நம்முடைய ஈமான் அதிகரிக்கும் வகையில் குறிப்பாக காலத்தின் கலீஃபா உடைய குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளைக் கண்டிப்பாகக் கேட்க வேண்டும்."

**காங்கோ கின்ஷாசாவிலிருந்தே இன்னொரு குறிப்பு.** இலீபு ஜமாஅத்தில் மாநாட்டின் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக ஹம்பளி முஸ்லிம்களின் இமாமுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. மாநாட்டின் முடிவில் அவர் கூறினார்: "ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் நமக்கு வழங்கிய இஸ்லாத்தினுடைய உண்மையான போதனையை அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்து வைக்கின்ற விதத்தைப் பார்க்கும் போது, என்னைப் பொறுத்தவரை அது இந்த ஜமாஅத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும். ஏதாவது செய்து இந்த ஜமாஅத்தில் இணைந்து விட தற்போது நான் விரும்புகின்றேன். அல்லாஹ் எனக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக."

அல்லாஹ் அவ்வாறே செய்வானாக! அல்லாஹ் அவருக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

**தப்லீகின் கீழ் இருக்கின்ற ஓர் அல்பானிய முஸ்லிம் பெண்மணி கூறுகிறார்:** "யு.கே ஆண்டு மாநாடு ஒரு மகத்துவமிக்க மாநாடாக இருந்தது. அதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை அசாதாரணமாக இருந்தது. நான் இதுவரை ஜமாஅத்தில் இணையவில்லைதான்! ஆனால் இந்த ஜமாஅத்தின் முக்கியத்துவம் மற்றும் உண்மையைக் குறித்து கவனமாக ஆராய வேண்டும் என்ற எண்ணத்தை இந்த மாநாடு எனக்குத் தூண்டியுள்ளது."

**ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்த ஒருவர் கூறுகிறார்:** "உலகளாவிய பைஅத் எனக்கு வியப்பை ஏற்படுத்திய ஓர் அனுபவமாக இருந்தது. அச்சமயத்தில் நான் எவ்வாறான ஆன்மீக நிலையை கடந்து சென்றேன் என்றால், அதற்கு முன்பு நான் அந்த நிலையை ஒருபோதும் உணர்ந்தது கிடையாது. எவ்வாறான ஓர் ஆன்மீக சூழலாக இருந்தது என்றால், அது எனக்கு மன அமைதியையும், நிம்மதியையும் வழங்கியது."

**ஏமனிலிருந்து ஷீமா காசிம் சாஹிபா கூறுகிறார்:** "நாங்கள் மாநாட்டின் நிகழ்ச்சிகளைப் பார்த்தோம். நாங்கள் சொர்க்கத்தில் இருப்பது போன்று தோன்றியது. இஸ்லாத்தின் கதிரவன் எங்கள் மீது மீண்டும் உதித்து, எங்களுடைய உள்ளங்களுக்கும் ஆன்மாவுக்கும் புத்துணர்ச்சி வழங்கியது போல் இருந்தது. எங்களிடம் உண்மையான நம்பிக்கை, நேசம், ஒற்றுமை மற்றும் நல்லொழுக்கம் ஆகியவற்றின் ஆன்மா ஊதப்பட்டது போல் தோன்றியது. நாங்கள் எங்களை

விட்டே வெகு தொலைவில் இருந்தோம். ஆனால், எங்களுடைய உள்ளம் உங்களுடன் இருந்தது. நாம் ஒரே வீட்டில்தான் இருந்தோம். ஓர் அஹ்மதியைத் தவிர வேறு எவரும் இந்தத் தொடர்பை உணர்ந்து கொள்ள இயலாது..... கருணையுள்ள எஜமானன், கிலாஃபத்திற்கு நிலையான தன்மையை வழங்குவானாக! அது இல்லாமல் எங்களுடைய இருப்பும் கிடையாது, நோக்கமும் கிடையாது.''

**கபாபீரைச் சேர்ந்த அரபு பெண்மணி, துஆ சாஹிபா என்பவர் கூறுகிறார்:** ''பைஅத்தின் வேளையில் உண்மையாகவே நாங்கள் காலத்தின் கலீஃபாவுடன் இருப்பது போன்ற உணர்வு எனக்குத் தோன்றியது. நமக்கிடையே எந்த நாடும் இருக்கவில்லை; எந்தக் கடலும் இருக்கவில்லை. இந்த அளவு மகிழ்ச்சியை உணர்ந்ததன் காரணமாக எனது இதயம் வெடித்து விடலாம் என்று எனக்குத் தோன்றியது.''

**BBC சவுத் உடைய பிரதிநிதியான, பத்திரிக்கையாளர் எட்வர்ட் சால்ட் என்பவர் கூறுகிறார்:** ''நான் மாநாட்டில் மிகவும் நல்ல விதத்தில் நேரத்தைக் கழித்தேன். விருந்தோம்பல் மிகவும் சிறப்பாக இருந்தது. பல்வேறு சொற்பொழிவுகளைக் கேட்டதனாலும் மிகவும் நன்றாக இருந்தது. இனிவரும் காலங்களிலும் உங்களுடன் சேர்ந்து பணியாற்றுவேன்.''

**ஸ்ரீலங்காவில் அஹ்மதியத்தை ஏற்றுக் கொண்ட ஒரு சம்பவம் குறித்து ஜமாஅத்தின் தலைவர் இவ்வாறு எழுதுகிறார்கள்:** ''உள்ளூர் ஜமாஅத்துகளில் கூட்டாக மாநாட்டைப் பார்ப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டினுடைய சூழ்நிலையின் காரணமாக வந்து செல்வதற்கு கடும் கஷ்டங்கள் இருந்த போதிலும், கொழும்புவில் ஜமாஅத் சென்டரில் 85 அஹ்மதிகள் மற்றும் அஹ்மதியல்லாதோர் மாநாட்டிலும், உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் 2 அன்பர்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர். அவ்வாறே, லைவ் ஸ்ட்ரீம் மூலமாக நிகம்பூ, பஸ்யாலா மற்றும் பொலன்னறுவா ஆகியவற்றில் ஜமாஅத்தினர் கூட்டாக மாநாட்டில் கலந்து கொண்டனர். அனைத்து நிகழ்ச்சிகளும் தமிழ் மொழியில் மொழியாக்கமும் செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளின் விளைவால் 4 நபர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை பெற்றனர்.''

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், கனடாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய குத்ரதுல்லாஹ் அத்னான் சாஹிப் அவர்களின் மனைவியாகிய* ***மதிப்பிற்குரிய நுஸ்ரத் குத்ரத் சுல்தானா சாஹிபா****, பாதி நூற்றாண்டை விடவும் அதிகமாக ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றவரும் வாழ்வை அர்ப்பணித்தவருமான* ***மதிப்பிற்குரிய சவுத்ரி லத்தீஃப் அஹ்மது ஜமட் சாஹிப்*** *மற்றும் மீர்பூர் காஷ்மீரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் ஆலம் சாஹிப் அவர்களின் மகனாகிய* ***மதிப்பிற்குரிய முஷ்தாக் அஹ்மத் ஆலம் சாஹிப்*** *ஆகியோரின் நற்குறிப்புகளை எடுத்துரைத்து, ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா ஃகாயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**